RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1120

# இலங்கைத் தமிழரின் பண்பாட்டுப் பரிமாணங்களில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் - ஓர் ஆய்வு

வ. குணபாலசிங்கம் [அ, *], எம்.எஸ்.ஜெ. மும்தாஜ் சமீம் [ஆ]

[அ] இந்து நாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, இலங்கை

[ஆ] பிரதிப் பதிவாளர், கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, இலங்கை

# Mahakavi Subramania Bharathiyar in Cultural Dimensions of Sri Lankan Tamils – A Study

**V. Gunapalasingam [a, *], M.S.J. Mumthaj Sameem [b]**

[a] Department of Hindu Civilization, Eastern University, Vantharumoolai, Sri Lanaka.

[b] Deputy Registrar, General Service Division, Eastern University, Vantharumoolai, Sri Lanka

* Corresponding Author: gunapalasingamv@esn.ac.lk

Received: 07-08-2021
Revised: 23-07-2022
Accepted: 26-07-2022
Published: 10-09-2022

## ABSTRACT

Relations between Sri Lankan Tamils and Tamil Nadu are indigenous. They are multidimensional. They span politics, geography, history, commerce, literature, art, culture, religion, and worship. Due to the popularity of Tamil personalities, it is common for their names to influence the cultural spheres of Sri Lankan Tamils. It is common practise to put the names of active personalities on corporate organisations and projects. In such a background, this research is carried out by proposing the research problem that the name of Mahakavi Bharathiyar has influenced the cultural sites of Sri Lankan Tamils. Bharathiar belongs to the list of freedom fighters who fought for India till its independence. During the colonial period, Bharathiyar resistance was seen in two ways. One is a chant against the oppressive system of foreigners, and the other is a chant against the backward ideas found in society. Through his works, Bharathiyar is notable among those who brought both of these to the masses. It is worth noting here that it was Swami Vibulananda who introduced Bharathiyar and his works to Sri Lankan Tamils. As a result, it seems that a revolutionary movement about Bharathiyar has spread among the Sri Lankan Tamils. It caused great changes in the socio-cultural sphere. Thus, Bharathi's name has gained a stable place among Sri Lankan Tamils. Bharathiyar's name spans government schools, reading roads, social charities, women's liberation organizations, newspapers, magazines, sports clubs, street names, personal names, etc. Bharathiyar's creations have also been studied at the same time that lessons about Bharathiyar have been included in the art programmes of educational institutions such as government schools and universities. Memorial lectures, study conferences, etc. have also been started in honour of Bharathiyar. Statues of Bharathiyar have been installed and many memorials have appeared in all the places where Sri Lankan Tamils live today. It is noteworthy that these activities are a sign of the Bharathi Tamil historical period and his presence here is also evident from the study.

**Keywords:** Sri Lankan Tamil, Cultural Dimensions, Swami Vibulananda, Freedom Fighter, Bharathiyar Works

## முன்னுரை

தமிழர்கள் செறிவாக வாழுகின்ற நாடுகளில் தமிழகத்திற்கு அடுத்தாற் போல் கொள்ளத்தக்க நாடு இலங்கை. பண்டைக்காலம் முதலாக இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே பல்வேறு வகையிலான உறவுகள் நிலவி வந்துள்ளன. இவ்வகையான உறவுகளால் தமிழ் நாட்டின் சூழற் பிரதிபலிப்புகள் இலங்கையிலும் செல்வாக்குச் செலுத்துகின்றமை குறிப்பிடற்குரியது. பழங்காலம் முதலாக இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்கும் இடையிலான உறவுகளில் நிலத்தொடர்பு மிகப்பெரிய தாக்கத்தினைச் செலுத்தியது எனலாம். இதனால்தான் பாரதி 'சிங்களத் தீவிற்கோர் பாலம் அமைப்போம்' எனப் பாடியுள்ளமை மிகுந்த அவதானத்தைப் பெறுகின்றது. இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையிலான உறவுகளின் இன்றியமையாத தன்மையினையே பாரதியின் இக்கவிவரிகள் அவாவி நிற்கின்றமை காணத்தக்கது. அத்துடன் இலங்கைத் தமிழர் மீதான பாரதியின் கரிசனையையும் இது புடம்போட்டுக் காட்டுகின்றது எனலாம்.

இந்திய கடற்பரப்பிலே, புவியியல் ரீதியான தரைத்தோற்ற இயல்புகளில் இலங்கை ஒரு சிறிய தனித்தீவு. தமிழகம் பெரும் நிலப்பரப்பினைக் கொண்டதொரு பிராந்திய நாடு. இவ்விரு நாடுகளையும் காலனித்துவ வாதிகள் ஒரே சமயத்தில் தம் ஆதிக்கத்தில் வைத்திருந்தனர். ஐரோப்பியரின் ஆதிக்கப் படர்ச்சியினால், சுதேசிய விடுதலைக்காக பல விடுதலைப் போராளிகள் உருவாவதற்கான சூழல் தவிர்க்க முடியாததொன்றாகக் காணப்பட்டது. விடுதலைப் போராட்ட வியூகம் பல பரிமாணங்களில் காணப்பட்டது. எழுது கோலை ஆயுதமாகக் கொண்ட போராளியாக மகாகவி சுப்பிரமணியப் பாரதியார் இனங்காணப்படுகின்றார். ஏக காலத்தில் இலங்கையில் பாவலர் துரையப்பாபிள்ளையும் தமிழகத்தில் சுப்பிரமணிய பாரதியாரும் வாழ்ந்தமை தமிழரின் சமுதாய விடுதலையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது எனலாம். பாரதியின் கவி நலமும் அதனால் ஏற்பட்டட சமுதாயச் சீர்திருத்தமும் சுவாமி விபுலானந்தரை ஈர்த்தவை எனலாம்.

மகாகவி பாரதியாரின் இலக்கியப் படைப்புகள் நவீனமான சிந்தனைகளை உடையவை. அவை நவீன கால தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கிய திருப்புமுனைகளாகவும் கொள்ளத்தக்கவை. இத்தகைய படைப்புகளின் முக்கியத்துவத்தனை உணர்ந்த சுவாமி விபுலாநந்தர் இலங்கைப் பல்கலைக்கழக (தற்போதைய பேராதனைப் பல்கலைக்கழகம்) தமிழ்த் துறையில் பணியாற்றிய காலம் மட்டக்களப்பிலே ஆங்கிலேயப் பாதரியார் ஒருவரின் தலைமையில் கூட்டம் ஒன்றினை ஒழுங்கு படுத்தி, அக்கூட்டத்திலே சுவாமி விபுலானந்தர் பாரதியாரின் படைப்புகளை அறிமுகம் செய்து, தமிழ் இலக்கிய வளர்ச்சிக் காலகட்டங்களிலே பாரதியின் படைப்புகளின் முக்கியத்துவம் பற்றியும் படைப்பாளியான பாரதியார் பற்றியதொரு சிறப்பு மிகுந்த விளக்கத்தினையும் அளித்திருந்தார்.

இலங்கைத் தமிழர்களின் பண்பாட்டுத் தளங்களிலே பாரத தேசத்தின் உன்னதமான பெரியவர்கள் பலர் தடம் பதித்துள்ளனர். அவர்களிலே, சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தியடிகள், சுப்பிரமணியப் பாரதியார் ஆகியோருக்கான மதிப்பும் அங்கீகாரமும் சிறப்பு நிலையிலுள்ளமை கவனத்திற்குரிய விடயங்களாகும். இம்மூவரிலும் மகாகவி பாரதியர் இலக்கிய வழி நின்று சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்திய விதம் சிறப்பிற்குரியது (Makkal Pathippu, 2019; Mani, 1982; Meiyappan, 2003; Sivathambi, 2010).

பாரதியாரின் பன்முக நோக்கு கொண்ட ஆக்க இலக்கியங்கள் காட்டுகின்ற முற்போக்கு சிந்தனைகள் இலங்கைத் தமிழர்களின் மனங்களில் இறுகிப்போயுள்ளன எனலாம். இக்காரணத்தினால்தான் தாம் சார்ந்த செயற் கருமங்களில் பாரதியாரின் பெயரையும் இணைத்துக் கொண்டமை குறிப்பிடற்குரியது.

## இலங்கைத் தமிழரின் கல்விப்புலம் சார் செயற்பாடுகளும் பாரதியின் பெயரும்

இலங்கைத் தமிழர் தமக்கே உரித்தான பண்பாட்டுப் பின்புலத்தினைக் கொண்டிருப்பினும் அதன் மூல ஊற்று தமிழ் நாட்டிலேயே துவங்கியது எனலாம். இரு நாடுகளுக்கும் இடையிலான பண்பாட்டு ஊடாட்டங்கள் இவ்வவ் பண்பாடுகளின் எழுச்சிக்குத் துணை நின்றன எனக்கொள்ள முடியும். செயற்கருமங்களுக்குச் சிறப்பு மிகுந்த பெரியவர்களின் திருநாமங்களைச் சூட்டி அவர்களுக்கு சிறப்புச்

செய்கின்ற வழக்கம் தமிழ் நாட்டிலே தொன்று தொட்டு நிலவி வந்த வழக்கங்களில் ஒன்றாகும். குறிப்பாக அப்பூதி அடிகள் திருநாவுக்கரசரின் திருத் தொண்டினால் கவரப்பட்ட நாள் முதல் தமது திருப்பணிகளுக்குத் திருநாவுக்கரசரின் பெயரைச் சூட்டியதும், தமது பிள்ளைகளக்கு மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு எனப்பெயர் சுட்டியமையையும் சான்றுக்காக எடுத்துச் சொல்ல முடியும். இந்த வழமை இலங்கை வாழ் தமிழர் மத்தியிலும் காணத்தக்கது. அந்தவகையில் பாரதியாரின் புரட்சிகரமான சிந்தனை இலங்கைத் தமிழரின் பண்பாட்டுப் பரிமாணங்களில் மிகுந்த செல்வாக்கினை ஏற்படுத்தியமைக்கு அவரது பெயரைத் தாங்கிய செயற்கருமங்கள் பலவற்றினைக் கூறமுடியும் (Padmanathan, 2010; Visuwanathan, 1929).

இலங்கையில் இலவசக்கல்வி முறையினால் அரசுப் பாடசாலைகள் பெருக்கம் பல்கிப் பெருகின எனலாம். தமிழ் மக்கள் செறிந்து வாழுகின்ற வடக்கு, கிழக்கு, மலைநாடு முதலிய பிராந்தியங்களில் தமிழ் மொழி மூலமான அரசுப் பாடசாலைகள் பல உருவாக்கப்பட்டுள்ளன. அப்பாடசாலைகளுக்கு பெயர்களைச் சூட்டுவதில் அரச தலையீடு அன்றி அப்பாடசாலைச் சமூகமே பொறுப்பாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாகும். இச்சூழலில் பல அரச பாடசாலைகளுக்கு பாரதியாரின் பெயரைச் சூட்டியுள்ளமை அவதானிக்கத்தக்கது. சான்றாக, இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஏறாவூர்ப் பற்றுக் கோட்டத்தில் அமைந்துள்ள சவுக்கடி என்னும் கிராமத்தில் உருவாக்கப்பட்டுள்ள அரசுப் பாடசாலைக்கு பாரதி வித்தியாலயம் என்னும் பெயரைச்சூட்டியுள்ளமையை எடுத்துக் காட்ட முடியும் (Padmanathan, 2012). அத்துடன் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளில் கட்டங்களின் எண்ணிக்கை அதிகமாகும். இக்கட்டடங்களை மாணவர்கள் இலகுவில் இனங்காண்பதற்கும் பெயரிடுதல் வழக்கம். மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் பாரதியின் பெயரால் ஒரு கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டுள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் உடல் உள விருத்தியில் விளையாட்டுக்கள் முதன்மையான இடத்தினை வகிக்கின்றன. இங்குள்ள பாடசாலைகளில் வருடாந்தம் மாணவரிடையே உள்ள விளையாட்டுத் திறனை வெளிக் கொணரும் பொருட்டு மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப தொகுதி தொகுதிகளாகப் பிரிக்கப்படுவர். ஓவ்வொரு தொகுதிக்கும் இல்லம் என்று பெயரிடுவது வழக்கம். அவ்வில்லங்களுக்குப் பெரியார்களின் பெயர்களையும் சூட்டுவர். அந்த வகையில் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பாரதியாரின் பெயரைச் சூட்டிய இல்லங்களையும் காணத்தக்கது. மட்டக்களப்பு வாகரை மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பாரதி இல்லம் என்றொரு இல்லமும் காணப்படுவது அவதானிக்கதக்கது (Padmanathan, 2012).

இலங்கையில் பாரதியாரின் பெயரைத்தாங்கிய முன்பள்ளிக் கூடங்களும், அறநெறிப் பாடசாலைகள் பலவும் உள்ளன. வாழைச்சேனை பேத்தாழை என்னும் ஊரில் 1982ஆம் ஆண்டு செடேக் கத்தோலிக்க நிறுவனம் பாரதி பாலர் பாடசாலை என்னும் பெயரில் முன்பள்ளிக் கூடம் ஒன்றினை ஆரம்பித்தது. ஆரம்பிக்கும் போது அறுபதிற்கு மேற்பட்ட பிள்ளைகள் அங்கு கல்வி பயின்றமை அங்குள்ள குறிப்பு ஒன்றினால் அறியமுடிகின்றது. மேலும் வாழைச்சேனை புதுக்குடியிருப்பு என்னும் ஊரில் காணத்தக்க சமுதாய மேம்பாட்டு நிறுவனங்களில் அங்குள்ள பாரதி கல்வி வட்டம் குறிப்பிடத்தக்கது. 1993ஆம் ஆண்டு இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. பிற்காலங்களில் பாரதி சமூக, கலை, இலக்கிய மேம்பாட்டுக் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்று அதன் செயற்பாடுகள் பல்பரிமாணத் தன்மையுடன் காணப்படுகின்றன (Chitralekha, 1996).

இலங்கையிலே இந்துச் சிறார்களின் ஒழுக்க விழுமியங்கள் சார்ந்த கல்வி தொடர்பாக இலங்கை அரசினால் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்றொரு அரசு நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளது. அதன் செயற்பாடுகளில் அறநெறிப் பாடசாலைகளை அமைத்து மாணவர்களுக்குச் சமய அறிவுடன் கூடிய விழுமியக் கல்வியினை அளிப்பது அதன் தலையாய நோக்கங்களில் ஒன்றாகும். 2016ஆம் ஆண்டு வாகரையிலுள்ள கண்டலடி என்னும் கிராமத்தில் பாரதி அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கும் போது 30 பிள்ளைகள் மாத்திரமே அங்கு கல்வி பயின்றனர். தற்காலம் 120 பிள்ளைகளாக அதிகரித்துள்ளன (Chitralekha, 1996). இது அதன் வளர்ச்சி நிலையைக் காட்டி நிற்கின்றது.

இலங்கையிலே காலத்திற்குக் காலம் தமிழில் பல பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் தோற்றம் பெற்றுள்ளன. இலங்கையின் தமிழர் செறிந்து வாழ்கின்ற மட்டக்களப்பு யாழ்ப்பாணம் போன்ற பிராந்தியங்களில் பாரதியின் பெயரைத்தாங்கிய பல பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் தோற்றம் பெற்றுள்ளன. மட்டக்களப்பு மண்டூரில் பாரதி சஞ்சிகை என்னும் இதழ் வெளி வந்துள்ளன. அதே போன்று பாடசாலைக் கல்வித் திட்டங்களிலும், பல்கலைக்கழக கல்வித் திட்டங்களிலும் பாரதியின் இலக்கியங்களும் அவை தொடர்பான திறனாய்வுகளும் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் தமிழ் கற்கை நெறிகள் உள்ள அரசுப் பல்கலைக்கழகங்களில் பாரதியின் நினைவு நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நினைவுச் சொற்பொழிவுகளும், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுக் கருத்தரங்குகளும் ஒழுங்குபடுத்தி நடாதப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாகும் (Chitralekha, 1996).

## இலங்கைத் தமிழரின் சமுதாயம் சார் செயற்பாடுகளும் பாரதியின் பெயரும்

தமிழகத்தின் தொடர்புகளால் சிறுப்புறும் இலங்கைத் தமிழர்கள் அங்கு வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய பெரியவர்களின் நினைவுகளைத் தம்மில் சுமக்கின்றனர்: நினைவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கின்றனர். சமுதாய சீர்திருத்த வாதியான பாரதியின் பெயரில் புதிய புதிய பல குடியேற்றக் கிராமங்கள் ஆரம்பிக்கப்பட்டுத் தற்காலம் அவற்றிலே சில நகரமயமாக்கப்பட்டுள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கது. மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட இடங்களில் பாரதி நகர் குறிப்பிடத்தக்கது. பாரதி நகரின் குறுக்கு வீதிகள் அனைத்தும் பாரதியின் பெயரைத்தாங்கி நிற்கின்றன (Chitralekha, 1996). இலங்கையின் மட்டக்களப்பில் உள்ள பல்வேறு இடங்களில் வீதிப்பெயர்கள் பல பாரதியின் பெருமையினைப் பறைசாற்றுகின்றன. சான்றுக்காகச் சில இடங்களைக் குறிப்பிட முடியும். ஆறுமுகத்தான் குடியிருப்பு, கொக்கட்டிச்சோலை முதலிய ஊர்களிலுள்ள வீதிகளின் பெயர்களில் பாரதியின் பெயரும் இடம் பிடித்துள்ளன.

பாரதியின் நினைவாக பல அரசு சார்பற்ற சமூகத் தொண்டு நிறுவனங்களும் இங்கு பணியாற்றுகின்றன. மாதர் சங்க அமைப்புகள் பலவும் உள்ளன. அவற்றிலே ஆறுமுகத்தான் குடியிருப்பு பாரதி மாதர் சங்கம் தமது பன்முகப்பட்ட செயற்பாடுகளால் ஏற்றம் பெற்றுள்ளன.

பாரதியின் நினைவாக அவரது சிலைகள் பல நிறுவப்பட்டுள்ளன. பொது இடங்களிலும், சாலையோரங்களிலும், சாலைகளின் மத்தியிலும் அவை காட்சயளிப்பது பாரதியின் நினைவலைகளை மக்களின் மனதில் நீங்காத இடத்தினைப் பிடித்திருப்பதனை உணரமுடிகின்றது. மட்டக்களப்பு ஊறணியில் வீதியோரமாக உள்ள பாரதி சிலை காண்போரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது (Chitralekha, 1996). அத்துடன் ஆரையம்பதியில் இரு போக்குவரத்துப் பாதைகளின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள பாரதியின் சிலையும் கவினுறு நிலையில் காணத்தக்கது. இவை போன்று இலங்கையின் தமிழர்கள் செறிந்து வாழுகின்ற எல்லா இடங்களிலும் பாரதியின் நினைவாலயங்களும், சிலைகளும் காணப்படுகின்றமைக் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாகும்.

## முடிவுரை

இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையிலுண்டான நல்லுறவுக்குப் பாரதி பற்றி பிரக்ஞையும் ஒரு காரணம் எனலாம். முற்போக்குச் சிந்தையுடன் வாழ்ந்து தமது வாழ்வை தமிழக்கும் தமிழர் சமுதாயத்திற்கும் அற்பணித்த ஒரு காலக் கவிஞன் பாரதி. பாரதியின் பெயரைத் தாங்கிய பல்வேறு செயற்பாடுகளும் இலங்கைத் தமிழர் மத்தியில் பாரதிக்கு கிடைத்த அங்கீகாரம் என்றே கூறவேண்டும்.

## References

Chitralekha, M., (1996) Bharathiyarin Penviduthalai Illakkiyam Karuththu Kalam, Vipulam Veeliyeedu, Srilanka.

Makkal Pathippu, (2019) Bharathiar Kavithaikal, Kavitha Veeliyeedu, Chennai, India.

Mani, P.S., (1982) Bharathiar Kavithaikal, Kavitha Veeliyeedu, Chennai, India.

Meiyappan, S., (2003) Bharathiar Kavithaikal, Thendral Nilaiyam, Chennai, India.

Padmanathan, C., (2012) British Rule Aand Modernization, Department of Hindu Religious and Cultural Affairs, Sri Lanka.

Sivathambi, K., (2010) Navenaththuvam Tamil Pin Navenaththuvam, New Century Book House Private Limited, Chennai, India.

Visuwanathan, C., (1929) Bharathiyum Avarathu Noolgalum, Bharathi Pirasuralayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License